In the Court of the I Addl. District Court, Madurai.
Deposition of Witness
**S.O.P.No.06/2023**

DEPOSITION OF P.W.1 WITNESS FOR THE

| | |
|---|---|
| Name | : திரு.திருப்பதிராஜா. |
| Father's name | : திரு. செல்வராஸ். |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 08.01.2025

முதல் விசாரணை -

நான் இம்மனுவில் மனுதாரர் மற்றும் மனுதாரர் தரப்பு 1 வது சாட்சியுமாவேன். எனது தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளைத் தெரிந்து கொண்டு அதன் ஒவ்வொரு பக்கத்திலும் நான் கையொப்பம் செய்துள்ளேன். நான் எனது தரப்பில் **10** ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை ம.சா.ஆ.**1** முதல் ம.சா.ஆ.**10** வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டுகிறேன். அவை முறையே,

ம.சா.ஆ.**1** – மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மற்றும் மனுதாரர் காவல்துறையில் பணிபுரிந்து வருவதற்கான அடையாள அட்டை நகல்.

ம.சா.ஆ.**2-** C. பெருமாள் காவல் துறையில் பணிபுரிந்தமைக்கான அடையாள அட்டை நகல்.

ம.சா.ஆ.**3** – 18.11.2016 அன்று C. பெருமாள் தனது LIC பாலிசியில் மனுதாரரை நாமினியாக சேர்த்தற்கான சான்றின் அசல்.

ம.சா.ஆ. **4** – 25.01.2021 அன்று C. பெருமாள் தனது புதிய LIC பாலிசியில் மனுதாரரை நாமினியாக நியமனம் செய்ததற்கான ஆவணம் நகல்.

ம.சா.ஆ.**5** -16.10.2022 ஆம் தேதிய C. பெருமாள் அவர்களின் இறப்பு சான்று அசல்.

ம.சா.ஆ. **6** – 16.10.2022 ஆம் தேதிய முதல் தகவல் அறிக்கை அசல்.

ம.சா.ஆ.**7** -16.10.2022 ஆம் தேதிய C. பெருமாள் அவர்களின் உடலை Mortuary Label க்கு அனுப்பியமைக்கான இரசீதின் அசல்.

ம.சா.ஆ. **8** – 16.10.2022 ஆம் தேதிய C. பெருமாள் அவர்களின் உடலை நல்லடக்கம் செய்ததற்கான மயானச் சான்று அசல்.

ம.சா.ஆ. **9** – 16.10.2022 – மயானத்தில் வழங்கப்பட்ட எரியூட்டுவதற்குரிய செலவின இரசீது அசல்.

ம.சா.ஆ. **10** – 20.10.2022 ஆம் தேதியன்று C. பெருமாள் குடியிருந்து வந்த காவலர் குடியிருப்பை அரசிடம் நல்லமுறையில் மனுதாரர் ஒப்படைத்ததற்கான சான்று அசல்.

ம.சா.ஆ.1 , 2 மற்றும் 4 ஆவணங்கள் அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன.
மனுப்படி உத்தரவாகவேண்டுகிறேன். ...

**குறுக்குவிசாரணை** - எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளின்பேரில் குறுக்குவிசாரணைக்காக ஒத்தி வைக்கப் படுகிறது.

ஒப்பம் - திருப்பதி ராஜா.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/- N. Nagalakshmi
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ),
மதுரை.